*10*-ஆம் வகுப்பு

# சமூக அறிவியல்

*10-ஆம் வகுப்பு*

# சமூக அறிவியல் சிறப்பு கையேடு

ஒரு மதிப்பெண் வினாக்கள்*( SOCIAL SCIENCE )*

*10- ஆம் வகுப்பு SOCIAL SCIENCE* **பாடப்புத்தகத்தில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்கள்**, *GeoGebra* **மென்பொருளின் உதவியோடு,ஒரு வினாவிற்கு சரியான விடையை தேர்வு செய்ய, அதிகபட்சம் மூன்று வாய்ப்புகள் வழங்கி, மாணவர்களின் கற்றல், கற்பித்தல் திறன் அதிகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.**

**குறிப்பு :** *Hi-Tech Lab-***ல்** *QR Code* **-ஐ** *Scan* **செய்து அல்லது** *Link* **-ஐ** *click* **செய்து மாணவர்கள் பயிற்சி செய்யும் விதமாக மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.**

| SOCIAL SCIENCE | ***TAMIL MEDIUM*** | ***ENGLISH MEDIUM*** |
|---|---|---|
| ***QR*** | | |
| ***LINK*** | ***https://www.geogebra.org/m/szdzaxbz*** | ***https://www.geogebra.org/m/yv4frpqy*** |

***Dr. MURALI. B. J HM,***
***GHSS BARUR, KRISHNAGIRI.***

***KALIYAPPAN .N ,PG ASST***
***GHSS MORANAHALLI, KRISHNAGIRI***

## ஒரு மதிப்பெண் – சரியான விடை

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
   **அ) ஜெர்மனி, ஆஸ்திரிய– ஹங்கேரி, உதுமானியர்**
   ஆ) ஜெர்மனி, ஆஸ்திரிய– ஹங்கேரி, ரஷ்யா
   இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி
   ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய– ஹங்கேரி, இத்தாலி
2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது ?
   அ) சீனா **ஆ) ஜப்பான்** இ) கொரியா ஈ) மங்கோலியா
3. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்?
   **அ) லெனின்** ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மா சே துங்
4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
   அ) ஆகாயப் போர் முறை **ஆ) பதுங்குக் குழிப் போர் முறை**
   இ) நீர்மூழ்கிக் கப்பல் போர் முறை ஈ) கடற்படைப் போர் முறை
5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   **அ) பிரிட்டன்** ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்சு ஐக்கிய நாடுகள்
6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது ?
   அ) ஜெர்மனி **ஆ) ரஷ்யா** இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்
7. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா **இ) போப்** ஈ) ஸ்பெயின்
8. யாருடைய ஆக்கிரமிப்பின்போது மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று ?
   **அ) ஹெர்மன் கோர்ட்ஸ்** ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
   இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் ஈ) முதலாம் பெட்ரோ
9. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்?
   அ) ஆங்கிலேயர் **ஆ) ஸ்பானியர்** இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்
10. லத்தீன் அமெரிக்காவுடன் " அண்டை நாட்டுடன் நட்புறவு " எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்க குடியரசுத் தலைவர் யார் ?
    **அ) பிராங்க்ளின் D. ரூஸ்வெல்ட்** ஆ) ட்ரூமன் இ) உட்ரோவில்சன் ஈ) ஐசனோவர்
11. உலகத்தின் எந்தப் பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை ?
    அ) ஐரோப்பா **ஆ) லத்தீன் அமெரிக்கா** இ) இந்தியா ஈ) சீனா
12. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது?
    **அ) செப்டம்பர் 2, 1945** ஆ) அக்டோபர் 2, 1945
    இ) ஆகஸ்டு 15, 1945 ஈ) அக்டோபர் 12, 1945
13. பன்னாட்டு சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார் ?
    அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பெர்லின் **இ) உட்ரோ வில்சன்** ஈ) பால்டுவின்
14. ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?
    அ) க்வாடல்கெனால் போர் **ஆ) மிட்வே போர்**
    இ) லெனின் கிரேடு போர் ஈ) எல் அலாமெய்ன் போர்

15. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
அ) கவாசாகி ஆ) டோக்கியோ **இ) ஹிரோஷிமா** ஈ) நாகாசாகி

16. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்?
அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள் இ) துருக்கியர்கள் **ஈ) யூதர்கள்**

17. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?
**அ) சேம்பர்லின்** ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்
இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டேன்லி பால்டுவின்

18. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?
அ) ஜுன் 26, 1942 **ஆ) ஜுன் 26, 1945**
இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1,1945

19. எந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன் வைத்தார் ?
அ) உட்ரோ வில்சன் **ஆ) ட்ரூமென்**
இ) தியோடர் ரூஸ்வெல்ட் ஈ) பிராங்களின் ரூஸ்வெல்ட்

20. அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர்……… ஆகும்.
அ) சீட்டோ **ஆ) நேட்டோ** இ) சென்டோ ஈ) வார்சா ஒப்பந்தம்

21. சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது ?
அ) செப்டம்பர் 1959 **ஆ) செப்டம்பர் 1949**
இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1944

22. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969 ல் தலைவராகப் பதவியேற்றவர் யார்?
அ) ஹபீஸ் அல்– ஆஸாத் **ஆ) யாசர் அராபத்** இ) நாசர் ஈ) சதாம் உசேன்

23. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது?
அ) 1975 **ஆ) 1976** இ) 1973 ஈ) 1974

24. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது
அ) 1979 ஆ) 1989 இ) 1990 **ஈ) 1991**

25. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது ?
அ) 1827 **ஆ) 1829** இ) 1826 ஈ) 1927

26. தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது ?
**அ) ஆரிய சமாஜம்** ஆ) பிரம்ம சமாஜம்
இ) பிரார்த்தனை சமாஜம் ஈ) ஆதி பிரம்ம சமாஜம்

27. யாருடைய பணியும் இயக்கமும் 1856 ஆம் ஆண்டு விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிகோலியது ?
**அ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்** ஆ) ராஜா ராம் மோகன் ராய்
இ) அன்னிபெசன்ட் ஈ) ஜோதிபா பூலே

28. "ராஸ்ட் கோப்தார்" யாருடைய முழக்கம் ?
**அ) பார்சி இயக்கம்** ஆ) அலிகார் இயக்கம்
இ) இராமகிருஷ்ணர் ஈ) திராவிட மகாஜன சபை

29. நாம்தாரி இயக்கத்தை உருவாக்கியவர் யார்?
அ) பாபா தயாள் தாஸ் **ஆ) பாபா ராம்சிங்** இ) குருநானக் ஈ) ஜோதிபா பூலே

30. விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் யார்?
**அ) மகாதேவ் கோவிந்த் ரானடே** ஆ) தேவேந்திரநாத் தாகூர்
இ) ஜோதிபா பூலே ஈ) அய்யன்காளி

31. "சத்யார்த்தபிரகாஷ்" எனும் நூலின் ஆசிரியர் யார்?
**அ) தயானந்த சரஸ்வதி** ஆ) அயோத்தி தாசர்
இ) அன்னிபெசன்ட் ஈ) நாராயண குரு

32. கிழக்கிந்திய கம்பெனியின் நாடு பிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்?
அ) மருது சகோதரர்கள் **ஆ) பூலித்தேவர்**
இ) வேலுநாச்சியார் ஈ) வீர பாண்டிய கட்டபொம்மன்

33. சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடும் நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக் கொண்டவர் யார்?
அ) வேலுநாச்சியார் ஆ) கட்டபொம்மன் **இ) பூலித்தேவர்** ஈ) ஊமைத்துரை

34. சிவசுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார் ?
அ) கயத்தாறு **ஆ) நாகலாபுரம்** இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி

35. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார் ?
**அ) மருது சகோதரர்கள்** ஆ) பூலித்தேவர்
இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) கோபால நாயக்கர்

36. வேலூர் கோட்டையில் புரட்சி எப்போது வெடித்தது ?
அ) 1805 மே 24 ஆ) 1805 ஜூலை 10
**இ) 1806 ஜூலை 10** ஈ) 1806 செப்டம்பர் 10

37. வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்த காரணமாயிருந்த தலைமை தளபதி யார் ?
அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங்
**இ) சர் ஜான் கிரடாக்** ஈ) கர்னல் அக்னியூ

38. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்?
**அ) கல்கத்தா** ஆ) மும்பை இ) டில்லி ஈ) மைசூர்

39. 1818 ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தில் ஹாஜி ஷரியத்துல்லா கீழ்க்கண்டவற்றில் எதனைத் தொடங்கினார்?
அ) வஹாபி கிளர்ச்சி **ஆ) ஃபராசி இயக்கம்**
இ) பழங்குடியினர் எழுச்சி ஈ) கோல் கிளர்ச்சி

40. "நிலம் கடவுளுக்குச் சொந்தம்" என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரி விதிப்பதோ, வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவர் யார்?
அ) டிடு மீர் ஆ) சித்து **இ) டுடூ மியான்** ஈ) ஷரியத்துல்லா

41. நிரந்தரக் குடியிருப்பின் கீழ் ஜமீன்களை உருவாக்கும் திட்டத்தின்படி தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள் யார் ?
**அ) சாந்தலர்கள்** ஆ) டிடு மீர் இ) முண்டா ஈ) கோல்

42. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார் ?
அ) தாதாபாய் நௌரோஜி ஆ) நீதிபதி மகாதேவ் கோவிந்த் ரானடே
**இ) பிபின் சந்திர பால்** ஈ) ரொமேஷ் சந்திரா

43. வங்கப்பிரிவினை எந்த நாளில் நடைமுறைக்கு வந்தது?
அ) 1905 ஜூன் 19 ஆ) 1906 ஜூலை 18
இ) 1907 ஆகஸ்ட் 19 **ஈ) 1905 அக்டோபர் 16**

44. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?
அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி
**இ) முண்டா கிளர்ச்சி** ஈ) தக்காண கலவரங்கள்

45. 1916 ஆம் ஆண்டு ஏப்ரலில் தன்னாட்சி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் யார் ?
அ) அன்னி பெசன்ட் அம்மையார் ஆ) பிபின் சந்திரபால்
இ) லாலா லஜபதி ராய் **ஈ) திலகர்**

46. நீல் தர்பன் நாடகம் மூலமாக எதிரப்பு போராட்டங்களின் போது இண்டிகோ பயிரிடும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து ஆங்கிலேயரின் கவனத்துக்கு கொண்டு சென்றவர் யார் ?
**அ) தீன பந்து மித்ரா** ஆ) ரொமேஷ் சந்திர தத்
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) பிர்சா முண்டா

47. அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்பு போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்?
அ) மோதிலால் நேரு **ஆ) டாக்டர் சைஃபுதீன் கிச்லு**
இ) முகம்மது அலி ஈ) ராஜ்குமார் சுக்லா

48. இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?
அ) பம்பாய் ஆ) மதராஸ் **இ) கல்கத்தா** ஈ) லக்னோ

49. விடுதலை நாளாக கீழ்க்கண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது ?
**அ) 1930 ஜனவரி 26** ஆ) 1929 டிசம்பர் 26
இ) 1946 ஜூன் 16 ஈ) 1947 ஜனவரி 15

50. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது?
அ) 1858 ஆ) 1911 **இ) 1865** ஈ) 1936

51. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
**அ) கோவில் நுழைவு நாள்** ஆ) மீட்பு நாள் (டெலிவரன்ஸ் டே)
இ) நேரடி நடவடிக்கை நாள் ஈ) சுதந்திரப் பெருநாள்

52. மாகாண தன்னாட்சியை அறிமுகம் செய்த சட்டம் எது ?
அ) 1858 ஆம் ஆண்டு சட்டம் இ) இந்திய அரசுச் சட்டம், 1919
ஆ) இந்திய கவுன்சில் சட்டம், 1909 **ஈ) இந்திய அரசுச் சட்டம், 1935**

53. சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார் ?
அ) T.M. நாயர் **ஆ) P. ரங்கைய நாயுடு** இ) G. சுப்ரமணியம் ஈ) G. A நடேசன்

54. இந்திய தேசியக் காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது ?
அ) மெரினா ஆ) மைலாப்பூர் இ) புனித ஜார்ஜ் கோட்டை **ஈ) ஆயிரம் விளக்கு**

55. "அதி நவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது " எனக் கூறியவர் யார் ?
**அ) அன்னிபெசன்ட்** ஆ)M.வீரராகவாச்சாரி இ)B.P.வாடியா ஈ)G.S.அருண்டேல்

56. கீழ்க்காண்பவர்களுள் சுயராஜ்ஜியவாதி யார்?
**அ) S. சத்தியமூர்த்தி** ஆ) கஸ்தூரிரங்கர் இ) P.சுப்பராயன் ஈ) பெரியார் ஈ.வே.ரா

57. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார்?
அ) K. காமராஜ் ஆ) C. இராஜாஜி இ) K. சந்தானம் **ஈ) T. பிரகாசம்**

58. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடைபெற்றது?
அ) ஈரோடு ஆ) சென்னை **இ) சேலம்** ஈ) மதுரை

59. 1709 இல் தரங்கம்பாடியில் – ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ் **இ) சீகன்பால்கு** ஈ) மீனாட்சி சுந்தரனார்

60. 1893 இல் ஆதி திராவிட மகாஜன சபையை நிறுவினார்.
**அ) இரட்டைமலை சீனிவாசன்** ஆ) B.R அம்பேத்கார்
இ) இராஜாஜி ஈ) எம்.சி. ராஜா

61. இந்தியாவின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கம் ………………… இல் உருவாக்கப்பட்டது
**அ) 1918** ஆ) 1917 இ) 1916 ஈ) 1914

62. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய நீதிக் கட்சியால் நிறுவப்பெற்றது.
**அ) பணியாளர் தேர்வு வாரியம்** ஆ) பொதுப் பணி ஆணையம்
இ) மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம் ஈ) பணியாளர் தேர்வாணையம்

63. சென்னை மாகாணத்தில், ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து முதன் முறையாகச் சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்.
**அ) எம்.சி.ராஜா** ஆ) இரட்டை மலை சீனிவாசன் இ) டி.எம். நாயர் ஈ) பி. வரதராஜூலு

64. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்
அ) 2,500 கி.மீ ஆ) 2933 கி.மீ **இ) 3,214 கி.மீ** ஈ) 2,814 கி.மீ

65. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி **இ) கோசி** ஈ) தாமோதர்

66. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ……………… என அழைக்கப்படுகிறது.
அ) கடற்கரை ஆ) தீவு **இ) தீபகற்பம்** ஈ) நீர்ச்சந்தி

67. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா …………. ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.
அ) கோவா ஆ) மேற்கு வங்காளம் **இ) இலங்கை** ஈ) மாலத்தீவு

68. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம்
அ) ஊட்டி ஆ) கொடைக்கானல் **இ) ஆனை முடி** ஈ) ஜின்டா கடா

69. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி
அ) பாபர் ஆ) தராய் **இ) பாங்கர்** ஈ) காதர்

70. பழவேற்காடு ஏரி ……………… மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.
அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா ஆ) கர்நாடகா மற்றும் கேரளா
இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் **ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்**

71. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி …………… ஆகும்.
அ) தமிழ்நாடு ஆ) கேரளா **இ) பஞ்சாப்** ஈ) மத்தியப்பிரதேசம்

72. கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு …………… காற்றுகள் உதவுகின்றன.
அ) லூ ஆ) நார்வெஸ்டர்ஸ் **இ) மாஞ்சாரல்** ஈ) ஜெட் காற்றோட்டம்

73. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு ………………… ஆகும்.
**அ) சம மழைக் கோடுகள்** ஆ) சம அழுத்தக் கோடுகள்
இ) சம வெப்பக் கோடுகள் ஈ) அட்சக் கோடுகள்

74. இந்தியாவின் காலநிலை ………………… ஆக பெயரிடப்பட்டுள்ளது.
அ) அயன மண்டல ஈரக் காலநிலை ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை
**இ) அயன மண்டல பருவக்காற்றுக் காலநிலை** ஈ) மித அயனமண்டலக் காலநிலை

75. பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் **ஆ) இலையுதிர்க் காடுகள்**
இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக் காடுகள்

76. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம்
அ) தமிழ்நாடு **ஆ) ஆந்திரப் பிரதேசம்** இ) மத்தியப் பிரதேசம் ஈ) கர்நாடகா

77. யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோளப் பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது
அ) நீலகிரி ஆ) அகத்திய மலை இ) பெரிய நிக்கோபார் **ஈ) கட்ச்**

78. ……………… மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது?
அ) வண்டல் ஆ) கரிசல் **இ) செம்மண்** ஈ) உவர் மண்

79. எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது ?
**அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்** ஆ) இந்திய வானியல் துறை
இ) இந்திய மண் அறிவியல் நிறுவனம் ஈ) இந்திய மண் ஆய்வு நிறுவனம்

80. ஆறுகளின் மூலம் உருவாகும் மண்
அ) செம்மண் ஆ) கரிசல் மண் இ) பாலை மண் **ஈ) வண்டல் மண்**

81. இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை
அ) ஹிராகுட் அணை **ஆ) பக்ராநங்கல் அணை**
இ) மேட்டூர் அணை ஈ) நாகர்ஜுனா சாகர் அணை

82. …………… என்பது ஒரு வாணிபப் பயிர்.
**அ) பருத்தி** ஆ) கோதுமை இ) அரிசி ஈ) மக்காச்சோளம்

83. கரிசல் மண் ……………… எனவும் அழைக்கப்படுகிறது.
அ) வண்டல் மண் ஆ) உவர் மண் **இ) பருத்தி மண்** ஈ) மலை மண்

84. உலகிலேயே மிக நீளமான அணை
அ) மேட்டூர் அணை ஆ) கோசி அணை
**இ) ஹிராகுட் அணை** ஈ) பக்ராநங்கல் அணை

85. இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது.
அ) பருத்தி ஆ) கோதுமை **இ) சணல்** ஈ) புகையிலை

86. மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது.
அ) காகித தொழிற்சாலை **ஆ) எஃகு தயாரிப்பு**
இ) செம்பு உருக்குதல் ஈ) பெட்ரோலிய சுத்திகரிப்பு

87. ஆந்த்ரசைட் நிலக்கரி ............... கார்பன் அளவை கொண்டுள்ளது.
**அ) 80 % – 90%** ஆ) 70% க்கு மேல் இ) 60% 70% ஈ) 50% க்கும் குறைவு

88. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் ..................
அ) ஆக்ஸிஜன் ஆ) நீர் **இ) கார்பன்** ஈ) நைட்ரஜன்

89. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்
அ) சேலம் ஆ) சென்னை இ) மதுரை **ஈ) கோயம்புத்தூர்**

90. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் **இ) மகாராஷ்டிரம்** ஈ) தமிழ்நாடு

91. மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம்
அ) உயிரி சக்தி **ஆ) சூரியன்** இ) நிலக்கரி ஈ) எண்ணெய்

92. சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது
அ) போக்குவரத்து **ஆ) கனிமப் படிவுகள்** இ) பெரும் தேவை ஈ) மின்சக்தி சக்தி

93. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு –
அ) வரைபடவியல் **ஆ) மக்களியல்** இ) மானுடவியல் ஈ) கல்வெட்டியல்

94. ..................... போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.
அ) ரயில்வே **ஆ) சாலை** இ) வான்வழி ஈ) நீர்வழி

95. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம்
**அ) 5846 கி.மீ** ஆ) 5947 கி.மீ இ) 5630 கி.மீ ஈ) 5800 கி.மீ

96. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம்
அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புதுடெல்லி **ஈ) ஹைதராபாத்**

97. எளிதில் செல்ல முடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து
அ) சாலைப் போக்குவரத்து **இ) வான்வழிப் போக்குவரத்து**
ஆ) இரயில் போக்குவரத்து ஈ) நீர்வழிப் போக்குவரத்து

98. கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தொடர்புடையது
அ) ஏர் இந்தியா ஆ) இந்தியன் ஏர்லைன்ஸ் இ) வாயுதூத் **ஈ) பவன்ஹான்ஸ்**

99. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள் ...............
அ) சிமெண்ட் ஆ) ஆபரணங்கள் இ) தேயிலை **ஈ) பெட்ரோலியம்**

100. தமிழ் நாட்டின் அட்சப் பரவல் ............... வரை உள்ளது.
**அ) $8^0$ 4' வ முதல் $13^0$ 35' வ வரை** ஆ) $8^0$ 5' தெ முதல் $13^0$ 35' தெ வரை
இ) $8^0$ 0' வ முதல் $13^0$ 05' வ வரை ஈ) $8^0$ 0' தெ முதல் $13^0$ 05' தெ வரை

101. தமிழ் நாட்டின் தீர்க்க பரவல் .................. வரை உள்ளது.
**அ) $76^0$ 18' கி முதல் $80^0$ 20' கி வரை** ஆ) $76^0$ 18' மே முதல் $80^0$ 20' மே வரை
இ) $10^0$ 20' கி முதல் $86^0$ 18' கி வரை ஈ) $10^0$ 20' மே முதல் $86^0$ 18' மே வரை

102. தமிழ் நாட்டின் உள்ள மிக உயரமான சிகரம் ......... ஆகும்.
அ) ஆனைமுடி **ஆ) தொட்டபெட்டா** இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்

103. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது?
அ) பாலக்காடு ஆ) செங்கோட்டை **இ) போர்காட்** ஈ) அச்சன்கோயில்

104. கீழ்கண்டவற்றில் அரபிக்கடலில் கலக்கும் ஆறு எது?
**அ) பெரியார்** ஆ) காவிரி இ) சிற்றார் ஈ) பவானி

105. தமிழ் நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது ?
அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் **இ) கடலூர்** ஈ) தேனி

106. பின்னடையும் பருவக்காற்று ……………… லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது
அ) அரபிக்கடல் **ஆ) வங்கக் கடல்** இ) இந்தியப் பெருங்கடல் ஈ) தைமுர்க் கடல்

107. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம்
அ) தருமபுரி ஆ) வேலூர் இ) திண்டுக்கல் **ஈ) ஈரோடு**

108. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா –
**அ) காவிரி டெல்டா** ஆ) மகாநதி டெல்டா
இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா

109. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவு பயிர் –
அ) பருப்பு வகைகள் **ஆ) சிறு தானியங்கள்** இ) எண்ணெய் வித்துகள் ஈ) நெல்

110. தமிழ் நாட்டின் மிகப்பெரிய நீர்மின் சக்தி திட்டம்
**அ) மேட்டூர்** ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா

111. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை
**அ) 3 மற்றும் 15** ஆ) 4 மற்றும் 16 இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

112. கீழ்க்காணும் வரிசையில் "முகவுரை" பற்றிய சரியான தொடர் எது ?
அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை
ஆ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக
இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக
**ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக குடியரசு**

113. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
**அ) ஒரு முறை** ஆ) இரு முறை இ) மூன்று முறை ஈ) எப்போழுதும் இல்லை

114. ஒரு வெளிநாட்டவர் கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெற முடியும் ?
அ) வம்சாவளி ஆ) பதிவு **இ) இயல்புரிமை** ஈ) மேற்கண்ட அனைத்தும்

115. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி
அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை
**இ) சொத்துரிமை** ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

116. கீழ்க்காண்பவற்றில் ஒன்று அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.
அ) கர்நாடகாவிலிருந்து கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்
ஆ) கிறித்துவ சமயக்குழு தொடர்ச்சியாக பள்ளிகைளை அமைத்தல்
இ) ஆண் பெண் இருபாலரும் அரசுப் பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்
**ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்**

117. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B. R. அம்பேத்கர் அவர்களால் "இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா என விவரிக்கப்பட்டது?
அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை
**இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை** ஈ) சொத்துரிமை

118. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்தி வைக்கப்பட முடியும் ?
அ) உச்சநீதி மன்றம் விரும்பினால் ஆ) பிரதமரின் ஆணையினால்
**இ) தேசிய அவசர நிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்**
ஈ) மேற்கண்ட அனைத்தும்

119. நமது அடிப்படைக் கடமைகளை ............. இடமிருந்து பெற்றோம்.
அ) அமெரிக்க அரசியலமைப்பு ஆ) கனடா அரசியலமைப்பு
**இ) ரஷ்யா அரசியலமைப்பு** ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

120. எந்த பிரிவின் கீழ் நிதி நிலை அவசரநிலையை அறிவிக்க முடியும் ?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356
**இ) சட்டப்பிரிவு 360** ஈ) சட்டப்பிரிவு 368

121. எந்தக் குழுக்கள் / ஆணையங்கள் நடுவண் – மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன ?
1. சர்க்காரியா குழு 2. ராஜமன்னார் குழு 3. M.N. வெங்கடாசலையா குழு
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு
அ) 1,2&3 **ஆ) 1&2** இ) 1&3 ஈ) 2& 3

122. நடுவண் அரசின் அரசியலமைப்பு தலைவர் ............. ஆவார்.
**அ) குடியரசுத் தலைவர்** ஆ) தலைமை நீதிபதி
இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

123. ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்
அ) குடியரசுத் தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர் **ஈ) லோக் சபாவின் சபாநாயகர்**

124. அமைச்சர்கள் குழு ஒட்டு மொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர்.
அ) குடியரசுத் தலைவர் **ஆ) மக்களவை** இ) பிரதம அமைச்சர் ஈ) மாநிலங்களவை

125. மக்களவை தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது
அ) 18 வயது ஆ) 21 வயது **இ) 25 வயது** ஈ) 30 வயது

126. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு
அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதம அமைச்சர்
இ) மாநில அரசாங்கம் **ஈ) நாடாளுமன்றம்**

127. கீழ்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?
அ) சட்டப்பிரிவு 352 **ஆ) சட்டப்பிரிவு 360**
இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365

128. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்
**அ) குடியரசுத் தலைவர்** ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) ஆளுநர் ஈ) பிரதம அமைச்சர்

129. மாநில ஆளுநரை நியமிப்பவர்
அ) பிரதமர் ஆ) முதலமைச்சர் **இ) குடியரசுத் தலைவர்** ஈ) தலைமை நீதிபதி

130. மாநில சபாநாயகர் ஒரு
அ) மாநிலத் தலைவர் ஆ) அரசின் தலைவர்
இ) குடியரசுத் தலைவரின் முகவர் **ஈ) மேற்கண்ட எதுவுமில்லை**

131. கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமல்ல.
அ) சட்ட மன்றம் ஆ) நிர்வாகம் இ) நீதித்துறை **ஈ) தூதரகம்**

132. ஆங்கிலோ – இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை சட்டமன்றத்திற்கு யார் நியமிக்கிறார் ?

அ) குடியரசுத் தலைவர் **ஆ) ஆளுநர்** இ) முதலமைச்சர் ஈ) சட்டமன்ற சபாநாயகர்

133. ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை ?

அ) முதலமைச்சர் ஆ) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணயத்தின் தலைவர்

இ) மாநில தலைமை வழக்குரைஞர் **ஈ) உயர் நீதிமன்ற நீதிபதிகள்**

134. மாநில அமைச்சரவையின் தலைவர்

**அ) முதலமைச்சர்** ஆ) ஆளுநர் இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர்

135. மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது

அ) 25 வயது ஆ) 21 வயது **இ) 30 வயது** ஈ) 35 வயது

136. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்ல

அ) ஆந்திரப் பிரதேசம் ஆ) தெலுங்கானா **இ) தமிழ்நாடு** ஈ) உத்திரப்பிரதேசம்

137. இந்தியாவில் முதன்முதலில் உயர்நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்

**அ) கல்கத்தா, பம்பாய், சென்னை** ஆ) டெல்லி மற்றும் கல்கத்தா

இ) டெல்லி, கல்கத்தா, சென்னை ஈ) கல்கத்தா, சென்னை, டெல்லி

138. கீழ்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர் நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன.

அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆ) கேரளா மற்றும் தெலுங்கானா

**இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா** ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

139. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?

அ) இந்தியா மற்றும் நேபாளம் ஆ) இந்தியா மற்றம் பாகிஸ்தான்

**இ) இந்தியா மற்றும் சீனா** ஈ) இந்தியா மற்றும் ஸ்ரீ லங்கா

140. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டபிரிவு எது?

அ) சட்டப்பிரிவு 50 **ஆ) சட்டப்பிரிவு 51** இ) சட்டப்பிரிவு 52 ஈ) சட்டப்பிரிவு 53

141. 1954 இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது.

அ) வியாபாரம் மற்றும் வணிகம் ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது

இ) கவாசாசார பரிமாற்றங்கள் **ஈ) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்**

142. நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது ?

அ) உலக ஒத்துழைப்பு ஆ) உலக அமைதி இ) இனச் சமத்துவம் **ஈ) காலனித்துவம்**

143. கீழ்க்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தில் நிறுவன உறுப்பினர் அல்லாத நாடு எது ?

அ) யுகோஸ்லாவியா ஆ) இந்தோனேசியா இ) எகிப்து **ஈ) பாகிஸ்தான்**

144. அணிசேராமை என்பதன் பொருள்

அ) நடுநிலைமை வகிப்பது

**ஆ) தன்னிச்சையாகப் பிரச்சனைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்**

இ) ராணுவமயமின்மை

ஈ) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

145. ராணுவம் சாராத பிரச்சனைகள் என்பது

அ) ஆற்றல் பாதுகாப்பு ஆ) நீர் பாதுகாப்பு

இ) தொற்றுநோய்கள் **ஈ) இவை அனைத்தும்**

146. மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும்?
அ) பர்மா– இந்தியா ஆ) இந்தியா நேபாளம்
**இ) இந்தியா – சீனா** ஈ) இந்தியா – பூடான்

147. இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினராக இல்லை ?
அ) ஜி 20 ஆ) ஏசியான் (ASEAN) இ) சார்க் (SAARC) ஈ) பிரிக்ஸ் (BRICS)
சரியானவற்றை தேர்ந்தெடு
**அ) 2 மட்டும்** ஆ) 2 மற்றும் 4 இ ) 2,4 மற்றும் 1 ஈ) 1, 2 மற்றும் 3

148. ஓபெக் (OPEC) என்பது
அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம் ஆ) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்
**இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு** ஈ) ஒரு சர்வதேச நிறுவனம்

149. இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது ?
**அ) வங்காளதேசம்** ஆ) மியான்மர் இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா

150. பின்வருவனவற்றைப் பொருத்தி கீழே கொடுக்கப்பட்ட குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
i) சல்மா அணை – 1. வங்காளதேசம்
ii) பராக்கா ஒப்பந்தம் – 2. நேபாளம்
ii) சுக்கா நீர்மின்சக்தி திட்டம் – 3. ஆப்கானிஸ்தான்
iv) சாரதா கூட்டு மின்சக்தித் திட்டம் – 4. பூடான்
**அ) 3 1 4 2** ஆ) 3 1 2 4 இ) 3 4 1 2 ஈ) 4 3 2 1

151. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன ?
அ) 5 ஆ) 6 **இ) 7** ஈ) 8

152. எந்த இரண்டு தீவுநாடுகள் இந்தியாவின் அண்டை நாடுகள் ஆகும் ?
அ) இலங்கை மற்றும் அந்தமான் தீவுகள் ஆ) மாலத்தீவு மற்றும் லட்சத் தீவுகள்
இ) மாலத்தீவு மற்றும் நிக்கோபார் தீவு **ஈ) இலங்கை மற்றும் மாலத்தீவு**

153. எந்த இந்திய மாநிலம் நேபாளத்துடன் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது?
**அ) அருணாச்சலப் பிரதேசம்** ஆ) மேகாலயா இ) மிசோரம் ஈ) அஸ்ஸாம்

154. எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
**அ) ஐந்து** ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு

155. சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர்.
அ) மவுண்ட்பேட்டன் பிரபு இ) கிளமன்ட் அட்லி
**ஆ) சர் சிரில் ராட்க்ளிஃப்** ஈ) மேற்கூறிய ஒருவருமில்லை

156. GNP யின் சமம்
அ) பண வீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP
ஆ) பண வீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP
**இ) GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்**
ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

157. நாட்டு வருமானம் அளவிடுவது
அ) பணத்தின் மொத்த மதிப்பு ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
**ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு**

158. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது

**அ) வேளாண்மை** ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ)வங்கி

159. ……………… முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.

அ) செலவு முறை **ஆ) மதிப்பு கூட்டு முறை**

இ) வருமான முறை ஈ) நாட்டு வருமானம்

160. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018–19 ல் ……………… லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

அ) 91.06 **ஆ) 92.26** இ) 80.07 ஈ) 98.29

161. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா …………………… அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.

அ) 1 வது ஆ) 3வது இ) 4 வது **ஈ) 2 வது**

162. இந்தியாவில் சராசரி ஆயுட்காலம் ………………… ஆண்டுகள் ஆகு

**அ) 65** ஆ) 60 இ) 70 ஈ) 55

163. கீழ்க்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை

அ) நீர்ப்பாசன கொள்கை இ) நில சீர்திருத்தக்கொள்கை

**ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை** ஈ) கூலிக்கொள்கை

164. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார் ?

அ) அமைச்சரவை இ) துணை தலைமை இயக்குநர்

**ஆ) தலைமை இயக்குநர்** ஈ) இவற்றில் எதுவுமில்லை

165. இந்தியாவில் காலனியாதிக்க வருகை

**அ) போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு**

ஆ) டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு

இ) போர்ச்சுகீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்கள்

ஈ) டேனிஷ், போர்ச்சுகீசியர், பிரெஞ்சு, ஆங்கிலேயர், டச்சு

166. காட்– இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்

அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே **ஈ) ஜெனீவா**

167. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?

அ) 1984 ஆ) 1976 இ) 1950 **ஈ) 1994**

168. 1632 இல் ஆங்கிலேயர்களுக்கு " கோல்டன் ஃபயர்மான்" வழங்கியவர் யார்?

அ) ஜஹாங்கீர் **ஆ) கோல்கொண்டா சுல்தான்** இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்

169. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP) அறிவித்த ஆண்டு ……………………

அ) ஜுன் 1991 ஆ) ஜூலை 1991 **இ) ஜூலை– ஆகஸ்ட் 1991** ஈ) ஆகஸ்ட் 1991

170. சேமிப்பு கிடங்கு என்பது உணவுப் தானியங்களான கோதுமை மற்றும் அரிசியை …………………… நிறுவனம் மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.

**அ) FCI** ஆ) நுகர்வோர் கூட்டுறவு இ) ICICI ஈ) IFCI

171. எது சரியானது ?

i) HYV– அதிக விளைச்சல் தரும் வகைகள் ii) MSP– குறைந்தபட்ச ஆதரவு விலை

iii) PDS– பொது விநியோக முறை iv) FCI – இந்திய உணவுக் கழகம்

அ) i மற்றும் ii சரியானவை ஆ) iii மற்றும் iv சரியானவை

இ) ii மற்றும் ii சரியானவை **ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி.**

172. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480 ஐ கொண்டு வந்த நாடு ………………
**அ) அமெரிக்கா** ஆ) இந்தியா இ) சிங்கப்பூர் ஈ) இங்கிலாந்து

173. ………………… இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகித்தது.
அ) நீலப் புரட்சி ஆ) வெள்ளைப் புரட்சி **இ) பசுமைப் புரட்சி** ஈ) சாம்பல் புரட்சி

174. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் …………
அ) கேரளா ஆ) ஆந்திரபிரதேசம் **இ) தமிழ்நாடு** ஈ) கர்நாடகா

175. ……………… என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல்முறையாகும்.
அ) ஆரோக்கியம் **ஆ) ஊட்டச்சத்து** இ) சுகாதாரம் ஈ) பாதுகாப்பு

176. இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள்
**அ) மைய, மாநில மற்றும் உள்ளாட்சி** ஆ) மைய, மாநில மற்றும் கிராம
இ) மைய, நகராட்சி மற்றும் பஞ்சாயத்து ஈ) ஏதுமில்லை

177. இந்தியாவில் உள்ள வரிகள்
அ) நேர்முக வரிகள் ஆ) மறைமுக வரிகள்
**இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ)** ஈ) ஏதுமில்லை

178. வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது ?
அ) பாதுகாப்பு ஆ) வெளிநாட்டுக் கொள்கை
இ) பொருளாதாரத்தை கட்டுப்படுத்தல் **ஈ) மேற்கூறிய அனைத்தும்**

179. இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பொதுவான மற்றும் மிக முக்கியமான வரி
அ) சேவை வரி ஆ) கலால் வரி **இ) வருமான வரி** ஈ) மத்திய விற்பனை வரி

180. ஒரு நாடு ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?
அ) மதிப்புக் கூட்டு வரி (VAT) ஆ) வருமான வரி
**இ) பண்டங்கள் மற்றம் பணிகள் வரி** ஈ) விற்பனை வரி

181. இந்தியாவில் வருமான வரிச்சட்டம் முதன்முதலில்———ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
**அ) 1860** ஆ) 1870 இ) 1880 ஈ) 1850

182. சொத்து உரிமையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்கு – வரி விதிக்கப்படுகிறது.
அ) வருமான வரி **ஆ) சொத்து வரி** இ) நிறுவன வரி ஈ) கலால் வரி

183. கருப்பு பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் எவை ?
அ) பண்டங்களின் பற்றாக்குறை ஆ) அதிக வரி விகிதம்
இ) கடத்தல் **ஈ) மேற்கூறிய அனைத்தும்**

184. ………………… என்பது ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் **இ) சென்னை** ஈ) மதுரை

185. குழாய்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது ……
அ) சேலம் **ஆ) கோயம்புத்தூர்** இ) சென்னை ஈ) தருமபுரி

186. …………………… என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய அம்சமாகும்.
அ) வேளாண்மை **ஆ) தொழில்** இ) இரயில்வே ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

187. திருப்பூர் …………… தொழிலுக்குப் பெயர்பெற்றது.
அ) தோல் பதனிடுதல் ஆ) பூட்டு தயாரித்தல்
**இ) பின்னலாடை தயாரித்தல்** ஈ) வேளாண் பதப்படுத்துதல்

188. ……………… இல் ஒரு வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டால் உருவாக்கப்பட்டது.
**அ) ஒசூர்** ஆ) திண்டுக்கல் இ) கோவில்பட்டி ஈ) திருநெல்வேலி

**189. பொருந்தாத விடையைத் தேர்வு செய்யவும்**
ஓதக்காடுகள் இதனைச்சுற்றி காணப்படுகிறது.
**அ) பாலைவனம்** ஆ) கங்கை பிரம்மபுத்திரா
இ) கோதாவரி டெல்டா ஈ) மகாநதி டெல்டா

190. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகளில் அமையாதது?
அ) அட்ச பரவல் ஆ) உயரம் இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம் **ஈ) மண்**

191. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி
அ) கோதுமை ஆ) நெல் இ) தினை வகைகள் **ஈ) காபி**

192. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி
அ) காதர் ஆ) பாங்கர் இ) வண்டல் மண் **ஈ) கரிசல் மண்**

193. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி
அ) வெள்ளப்பெருக்கு கால்வாய் ஆ) வற்றாத கால்வாய் **இ) ஏரிப்பாசனம்** ஈ) கால்வாய்

194. தவறான ஒன்றினை தேர்வு செய்க.
பின்வருவனவற்றில் தோல் தொழிற்சாலைகள் இல்லாதது எது?
அ) ராணிப்பேட்டை **ஆ) தர்மபுரி** இ) ஆம்பூர் ஈ) வாணியம்பாடி

195. பின்வருவனவற்றில் எது தொழில்துறை வளர்ச்சி நிறுவனம் அல்ல ?
அ) TIDCO ஆ) SIDCO **இ) MEPZ** ஈ) SIPCOT

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. **1894** ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
2. 1913 ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட **லண்டன்** உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
3. **1902** ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்து நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
4. பால்கனில் **மாசிடோனியா** நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.
5. டானெனபர்க் போரில் **ரஷ்யா** பேரிழப்புகளுக்கு உள்ளானது.
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் **கிளமன்சோ** ஆவார்.
7. **1925** ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.
8. சமூக ஜனநாயக கட்சியை நிறுவியவர் **பெர்டினன்ட் லாஸ்ஸல்லி**.
9. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் **ஜோசப் கோயபெல்ஸ்**.
10. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி **1927** இல் நிறுவப்பட்டது.
11. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை **கெஸ்டபோ** என அழைக்கப்பட்டது.
12. தென்னாப்பிரிக்க ஒன்றியம் **1910** ஆம் ஆண்டு மே மாதம் உருவானது.
13. ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவரான நெல்சன் மண்டேலா **27** ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

14. போயர்கள் **ஆப்பிரிக்கநேர்கள்** என்றும் அழைக்கப்பட்டனர்.
15. படை நீக்கம் செய்யப்பட்ட **ரைன்லாந்தை** பகுதியை ஹிட்லர் தாக்கினார்.
16. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிக்கிடையேயான ஒப்பந்தம் **ரோம் –டோக்கியோ–பெர்லின்** அச்சு உடன்படிக்கை என அழைக்கப்பட்டது.
17. 1940 இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் **சேம்பர்லின்** ஆவார்.
18. **ரேடார்** என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.
19. நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் **டாக்டர் சன்யாட்சென்** ஆவார்.
20. 1918 ல் **பீகிங்** பல்கலைகழகத்தில் மார்க்ஸியக் கோட்பாட்டை அறியும் அமைப்பு நிறுவப்பட்டது.
21. டாக்டர் சன்யாட் சென்னின் மறைவுக்குப் பின்னர் கோமிங்டாங் கட்சியின் தலைவராக இருந்தவர் **ஷியாங் கேஷேக் –** ஆவார்.
22. அமைதியையும், பாதுகாப்பையும் விரும்பிய அரபு நாடுகளுக்கு திறந்தே இருந்த ஒப்பந்தம் **சென்டோ (அ) பாக்தாத் ஒப்பந்தம்** ஆகும்.
23. துருக்கிய அரபுப்பேரரசை ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்த ஒப்பந்தம் **வெர்செய்ல்ஸ்** ஆகும்.
24. ஜெர்மனி நேட்டோவில் **1955** ஆண்டு இணைந்தது.
25. ஐரோப்பியக் குழுமத்தின் தலைமையகம் **ஸ்ட்ராஸ்பர்க்** நகரில் அமைந்துள்ளது.
26. ஐரோப்பிய இணைவை உறுதி செய்ய 7 பிப்ரவரி 1992 இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் **மாஸ்டிரிக்ட்** ஒப்பந்தம் ஆகும்.
27. **இராமலிங்க சுவாமிகள் (அ) வள்ளலார்** சமரச வேத சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.
28. புனே சர்வஜனிக் சபாவை நிறுவியவர் **மகாதேவ கோவிந்த ரானடே**
29. குலாம் கிரி நூலை எழுதியவர் **ஜோதிபா புலே**
30. இராமகிருஷ்ணா மிஷன் **சுவாமி விவேகானந்தர்** ஆல் நிறுவப்பட்டது.
31. **சிங்சபா** அகாலி இயக்கத்தின் முன்னோடி அமைப்பாகும்.
32. "ஒரு பைசாத் தமிழன் பத்திரிகையைத் துவக்கியவர்"**அயோத்திதாசர்** ஆவார்.
33. பாளையக்காரர் முறை தமிழகத்தில் **விஸ்வநாத நாயக்கர்** என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
34. வேலுநாச்சியாரும் அவரது மகளும் எட்டாண்டுகளாக **கோபால நாயக்கர்** பாதுகாப்பில் இருந்தனர்.
35. கட்டபொம்மனை சரணடையக் கோரும் தகவலை தெரிவிக்க பானெர்மென் **இராமலிங்கனார்** என்பவரை அனுப்பிவைத்தார்.
36. கட்டபொம்மன் **கயத்தாறு** என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
37. மருது சகோதரர்களின் புரட்சி பிரிட்டிஷ் குறிப்புகளில் **இரண்டாவது பாளையக்காரர்போர்** என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.
38. **ஃபதே ஹைதர்** என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையில் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.
39. மன்னராட்சிக்கும் நிலசுவான்தாரர்களுக்கும் எதிரான **வஹாபி** இயக்கம் 1827 ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்டது.
40. சோட்டாநாக்பூர் பகுதியில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினர் கிளர்ச்சி **கோல் கிளர்ச்சி**
41. சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு **1908**.
42. உமேஷ் சந்திர பானர்ஜி இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு **1885**.
43. காந்தியடிகளின் அரசியல் குரு **கோபால கிருஷ்ண கோகலே** ஆவார்.

சமூக அறிவியல்

44. கிலாபத் இயக்கத்துக்கு <u>முகமது அலி மற்றும் சௌகத் அலி (அலிசகோதரர்கள்)</u> தலைமை ஏற்றார்.
45. 1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களில் <u>இரட்டை ஆட்சி</u> அறிமுகம் செய்தது.
46. வடமேற்கு எல்லை மாகாணத்தில் சட்டமறுப்பு இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர் <u>கான் அப்துல் கஃபார்கான்.</u>
47. சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு தனித் தொகுதிகள வழங்கும் <u>வகுப்புவாரி ஒதுக்கீடு</u> ஐ ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார்.
48. <u>உஷா மேத்தா</u> என்பவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது காங்கிரஸ் வானொலியை திரைமறைவாக செயல்படுத்தினார்.
49. சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியமர்த்தப்பட்ட முதல் இந்திய நீதிபதி <u>T. முத்துசாமி</u> ஆவார்.
50. <u>பாரதமாதா சங்கம்</u> எனும் ரகசிய அமைப்பை நீலகண்ட பிரம்மச்சாரி தொடங்கினார்.
51. சென்னையில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் <u>C. ராஜாஜி.</u>
52. <u>யாகூப் ஹசன்</u> முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை உருவாக்கியவராவார்.
53. 1932 ஜனவரி 26 ல் <u>பாஷ்யம்</u> புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.
54. முதன்முதலாக அச்சேறிய ஐரோப்பிய மொழி அல்லாத மொழி <u>தமிழ்</u> ஆகும்.
55. புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை உருவாக்கியவர் <u>F.W. எல்லிஸ்</u> ஆவார்.
56. <u>மறைமலை அடிகள்</u> தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தையெனக் கருதப்படுகிறார்.
57. தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை முதலில் அங்கீகரித்தது <u>நீதிகட்சி</u> ஆகும்.
58. சூரியநாராயண சாஸ்திரி எனும் பெயர் <u>பரிதிமார் கலைஞர்</u> என மாற்றம் பெற்றது.
59. <u>ஆபிரகாம் பண்டிதர்</u> தமிழ் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
60. இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் <u>முத்துலட்சுமி அம்மையார்</u>.
61. நீலகிரி மற்றுமம் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி <u>கோயம்புத்தூர் பீடபூமி</u> ஆகும்.
62. கிழக்கு தொடர்ச்சி மலையில் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் <u>சோலைக்கரடு</u> ஆகும்.
63. ஆற்றுத் தீவான ஸ்ரீரங்கம் <u>கொள்ளிடம்</u> மற்றும் <u>காவேரி</u> ஆறுகளுக்கிடையே அமைந்துள்ளது.
64. <u>வரையாடு</u> தமிழ் நாட்டின் மாநில விலங்கு ஆகும்.
65. தமிழ்நாட்டின் பொருளதாரத்தில் வேளாண்மை துறையின் பங்கு <u>21</u> சதவீதத்தை வகிக்கிறது.
66. சாத்தனூர் அணை <u>தென்பெண்ணை</u> ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
67. மும்பை மற்றும் டில்லியை அடுத்து இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் <u>சென்னை.</u>
68. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை <u>அமெரிக்க ஐக்கிய நாட்டில்</u> தோன்றியது.
69. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக <u>Dr.சச்சிதனாந்த சின்ஹா</u> தேர்ந்தெடுக்கப்பட்டார்.
70. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு <u>1949 நவம்பர் 26.</u>
71. சட்டப்பிரிவு 32–ல் குறிப்பிடப்பட்டுள்ள நீதிபேராணைகளின் எண்ணிக்கை <u>ஐந்து.</u>

72. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் **51 A** பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.
73. **நிதி** மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது.
74. **பிரதம அமைச்சர்** நாட்டின் உண்மையான தலைவராகவும் நாட்டின் முக்கியக் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
75. **துணைக்குடியரசுத் தலைவர்** அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.
76. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும் கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் **அட்டார்னி ஜெனரல்**.
77. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஒய்வு பெறும் வயது **65.**
78. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் **உச்சநீதிமன்றம்** ஆகும்.
79. ஆளுநர் தனது இராஜினாமா கடிதத்தை **குடியரசுத் தலைவர்** இடம் கொடுக்கிறார்
80. சட்ட மன்ற உறுப்பினர்கள் (MLAs) **மக்களால் நேரடியாக** ஆல் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
81. **ஆளுநர்** மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
9. சேரன் மாதேவி குருகுலப் பள்ளி சாதிவேறுபாடு எதிர்ப்பு.
10. மூட நம்பிக்கைகளை வன்மையாக கண்டித்தார்.

## புவியியல்

## 5 மதிப்பெண் வினா –விடைகள் (வினா எண் 35 மற்றும் 36)

**1. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

1. தென் இந்தியாவில் யாயும் ஆறுகள்.
2. பெரும்பாலான ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தி.
3. இவை பருவகால ஆறுகள் (அ) வற்றும் ஆறுகள் ஆகும்.
4. இரு வகைப்படும்.

**1. கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்:** வங்காள விரிகுடாவில் கலக்கும்

**மகாநதி** :85 கிமீ நீளம்., சத்தீஸ்கர் மாநிலம், ராய்ப்பூர் மாவட்டம் – சிகாவில் உற்பத்தி.

**கோதாவரி** : (நீளமான ஆறு)

1465 கிமீ நீளம்., மகாராஷ்டிராவின் நாசிக் மாவட்டத்தில் உருவாகிறது.

**கிருஷ்ணா** :1400 கிமீ நீளம்., மகாராஷ்டிராவின் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தி.

**காவிரி (தென் கங்கா)**

800 கிமீ நீளம்., கர்நாடகா – குடகு மலை, தலைக்காவேரியில் உற்பத்தி.

**2. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள்**அரேபியக் கடலில் கலக்கும்

**நர்மதா** :1312 கிமீ நீளம்., மத்தியப் பிரதேசம் – அமர்கண்டக் பீடபூமியில் உற்பத்தி.

**தபதி :** 724 கிமீ நீளம்., மத்தியப் பிரதேசத்தின் முல்தாயில் உற்பத்தி.



**2. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக**

1. இந்திய கால நிலையின் முக்கிய அம்சம்.
2. எல்நினோ நிகழ்வு மிகப்பெரிய தாக்கம்.
3. ஜூன் முதல் வாரம் தென் இந்தியா, பிறகு இந்தியா முழுவதும்.
4. இது இடி, மின்னலுடன் கூடிய துவக்கம் பருவமழை வெடிப்பு.
5. தென் முனையை அடையும் போது இரு கிளையாகிறது.
   1. அரபிக்கடல் கிளை
   2. வங்காள விரிகுடா கிளை

**3. இந்திய மண் வகைகளை ஏதேனும் ஐந்தினை குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.**

1. **வண்டல் மண் :**
   பண்புகள் வெளிர் நிறமுடையது மற்றும் மண: ற்பாங்கானது.
   பரவல்கங்கை :, பிரம்மபுத்திரா சமவெளி, பஞ்சாப், ஹரியானா.
2. **கரிசல் மண்:**
   பண்புகள் ஈரப்பதத்தை தக்க வைக்: கும் சேறாகும்.
   பரவல்மகாராஷ்டிரா :, தெலுங்கானா.
3. **செம்மண்:**
   பண்புகள் உப்பு கரைசல், வெண் களிப்பாறை வெடிப்புடன் கூடிய செம்மண் படிவு.
   பரவல்கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா.
4. **சரளைமண்:**
   பண்புகள் உயர: மான மலைகளில் அதிக அமிலத்தன்மையும், தாழ்வான பகுதியில் குறைந்தும் இருக்கும்.
   பரவல்அசாம் மலைகள் :, கேரளா, கர்நாடகா மலையடிவாரம்.
5. மலை மண் :
   பண்புகள் மென்மையான மண் மற்றும் பாறைத்து: கள்.
   பரவல் :இமாச்சல், உத்தரகாண்ட், சிக்கிம்.
6. **பாலை மண்:**
   பண்புகள் குறைந்த :வெளிர் நிறம், ஈரப்பதம் )இலைமக்குறைவு
7. **கார மண்:**
   பண்புகள் :சிதைக்கப்படாத பாறை, சிதைவுற்ற கனிமங்கள்.
8. **களிமண் :**
   பண்புகள் ஈரத்தன்மை, இலைமக்கு, கருமைப்பதம், மட்கிய, அடர் நிறம்.

**4. பல்நோக்கு திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.**

**பல்நோக்கு திட்டம் :**

1. இது ஒரு அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மை திட்டம்.
2. ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகளைக் கட்டுவதால் இவை பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் என்று அழைக்கப்படுகிறது.
3. நீர்மின் சக்தி மற்றும் நீர்பாசனம் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

**1. பக்ரா நங்கல் திட்டம் :**

1. சட்லஜ் நதியின் குறுக்கே உள்ள உலகின் மிகப்பெரிய புவிஈர்ப்பு அணை.
2. பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்கள் பயனடைகிறது.
3. 52,609 ச.கி.மீ. நீர்பாசன பரப்பு.
4. 1500 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தி.

**2. ஹிராகுட் திட்டம் :**

1. மகாநதியின் குறுக்கே கட்டப்பட்ட உலகின் மிக நீளமான அணை ஒடிசா பயன்பெறுகிறது.
2. 1,41,600 ச.கி.மீ. நீர்பாசன பரப்பு.
3. 347.5 மெகாவாட் நீர்மின்சக்தி உற்பத்தி.

**5. இந்திய விவசாயிகள் எதிர்காள்ளும் ஏதேனும் ஐந்து முக்கிய சவால்களை எழுதுக?**

1. வளமற்ற மண்
2. நீர்ப்பாசன பற்றாக்குறை
3. மண் அரிப்பு
4. மூலதன பற்றாக்குறை
5. போக்குவரத்து வசதியின்மை
6. சேமிப்புகிடங்கு வசதியின்மை
7. அதிக செலவின உள்ளீடுகள்

**6. நகரமயமாக்கல் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக.**

**நகரமயமாக்கல்**

**கிராமப்புற** சமுதாயம், நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதே நகரமயமாக்கல் என்கிறோம்.

**நகரமயமாக்களின் தாக்கங்கள்**

1) நகர விரிவாக்கம்
2) மக்கள் நெருக்கடி
3) குடிநீர் பற்றாக்குறை
4) வடிகால் பிரச்சினை
5) குடியிருப்பு பற்றாக்குறை
6) போக்குவரத்து நெரிசல்
7) குடிசைப்பகுதிகள் தோற்றம்
8) திடக்கழிவு மேலாண்மை சிக்கல்

**7. இந்தியாவின் சாலைகளை வகைபடுத்தி விளக்குக.**

**1. தேசிய நெடுஞ்சாலைகள்**

மத்திய நெடுஞ்சாலை துறையால் பராமரிக்கப்படுகிறது.
எ.கா. வரணாசி முதல் கன்னியாகுமரி வரை.

**2. மாநில நெடுஞ்சாலைகள்**

மாநில அரசால் பராமரிக்கப்படுகிறது

**3. மாவட்ட சாலைகள்**

மாநில பொதுப்பணி துறையால் பராமரிக்கப்படுகிறது.
மாவட்ட மற்றும் வட்டார தலைமை இடங்களை இணைக்கிறது.

**4. கிராமபுற சாலைகள்**

கிராம பஞ்சாயத்துகளால் பராமரிக்கப்படுகிறது.
கிராமங்களை அருகில் உள்ள நகரங்களுடன் இணைக்கிறது.

**5. எல்லைப் புறச் சாலைகள்**

எல்லைப் புறச் சாலைகள் நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது.
எ.கா. லடாக் முதல் சண்டிகர் வரை.

**6. தங்க நாற்கரச் சாலைகள்**

**7. விரைவுச் சாலைகள்**

8. பன்னாட்டு நெடுஞ்சாலைகள்

8. காவிரி ஆறு குறித்து தொகுத்து எழுதுக.

1. கர்நாடக மாநிலம்–குடகு மாவட்டம்–தலைக்காவிரியில் உற்பத்தி
2. கர்நாடகா–தமிழ்நாட்டிற்கு 64 கி.மீ எல்லையாகஉள்ளது.
3. தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியை பெற்றுள்ளது.
4. சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணை உள்ளது
5. துணை ஆறுகள்–பவானி நொய்யல், அமராவதி
6. திருச்சி மாவட்டத்தில் கல்லணை உள்ளது
7. திருச்சி மாவட்டத்தில் இரு கிளையாக பிரிந்து (கொள்ளிடம், காவிரி) ஸ்ரீரங்கம் தீவை உருவாக்குகிறது.
8. இறுதியாக கடலூருக்குத் தெற்கே கடலில் கலக்கிறது.

9. தமிழ்நாட்டில் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக

**தோட்ட வேளாண்மை:**

ஒரு பெரிய நிலப்பரப்பில் அறிவியல் முறைப்படி ஒரே பயிரை (மலைச்சரிவுகளில்) அதிக அளவில் பயிரிடுவது (எ.கா) காப்பி, தேயிலை, ரப்பர், முந்திரி, சின்கோனா.

**காப்பி:**

1. காப்பி உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாமிடம் .
2. மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் பயிரிடப்படுகிறது.

**தேயிலை:**

1. தேயிலை உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாமிடம் .
2. நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மலைகளில் பயிரிடப்படுகிறது.

**ரப்பர்:**

கன்னியாகுமரி மலைப்பகுதியில் அதிகம் பயிரிடப்படுகிறது.

**சின்கோனா:**

ஆனை மலைப்பகுதியில் சின்கோனா பயிரிடப்படுகிறது.

**முந்திரி:**

கடலூர் மாவட்டத்தில் அதிகம் பயிராகிறது.

**ஏலக்காய்:**

மதுரையை சுற்றியுள்ள மலைப்பகுதியில் பயிரிடப்படுகிறது.

**மிளகு:**

மேற்கு மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைச்சரிவுகளில் பயிராகிறது.

10. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களை பற்றி எழுதுக.

1. மனிதன் மற்றும் அனைத்து உயிரினங்களுக்கும் நீர் இயற்கையின் ஒரு விலைமதிப்பற்ற பரிசாகும்.
2. இந்தியாவின் மக்கள் தொகையில் 6% உள்ள தமிழ்நாடு நீர்வளத்தில் 2.5% மட்டுமே பெற்றுள்ளது.
3. தமிழ்நாடு நீர் ஆதாரத்திற்கு பருவ மழையையே சார்ந்து உள்ளது.
4. தமிழகத்தின் ஆண்டு சராசரி மழையளவு 930 மில்லி மீட்டர்.
5. தமிழ்நாட்டின் நீர் தேவையை பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டங்கள் பூர்த்தி செய்கின்றன.

**11. தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி.**

**சாலை போக்குவரத்து:**

1. மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கி.மீ ஆகும்.
2. மாநில நெடுஞ்சாலைகள் பராமரிப்பு.

**இரயில் போக்குவரத்து:**

1. மொத்த இருப்புப் பாதையின் நீளம் 6,693 கிமீ..
2. தெற்கு ரயில்வேயின் தலைமையிடம் சென்னை.

**வான்வழி போக்குவரத்து:**

1. சென்னை நாட்டின் மூன்றாவது பெரிய விமான நிலையம்.
2. 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை.

**நீர்வழிப் போக்குவரத்து:**

1. 3 பெரிய துறைமுகங்களும் (சென்னை, எண்ணூர், தூத்துக்குடி), 15 சிறிய துறைமுகங்களும் உள்ளன.
2. சிறிய துறைமுகங்கள் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

## குடிமையியல்

## 5 மதிப்பெண் வினா–விடைகள் (வினா எண் 37 மற்றும் 38)

**1. இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகளை விளக்குக :**

1. உலகில் எழுதப்பட்ட நீண்ட அரசியலமைப்பு.
2. நெகிழும், நெகிழாத் தன்மை கொண்டது.
3. கூட்டாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது.
4. இந்தியாவை சமயசார்பற்ற நாடாக்குகிறது.
5. சுதந்திரமான நீதித்துறையை ஏற்படுத்துகிறது.
6. ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.
7. 18 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை.
8. பல கருத்துக்கள் பல நாடுகளிடமிருந்து பெறப்பட்டன.

**2. அடிப்படை உரிமைகளுக்கும், அரசுநெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் கூறுக.**

| அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் |
|---|---|
| 1. அமெரிக்காவிடம் பெறப்பட்டது | 1 அயர்லாந்திடம் பெறப்பட்டது |
| 2. அரசால் எதுவும் செய்ய முடியாது | 2 அரசுக்கு அறிவுறுத்தல் |
| 3. நீதிமன்ற சட்டத்தின்படி செயல் | 3 எந்த நீதிமன்றத்தாலும் கட்டுப்படாது |
| 4. சட்ட ஒப்புதலைப் பெற்றவை | 4 தார்மீக அரசியல் ஒப்புதல் பெற்றவை |
| 5. அரசியல் ஜனநாயகம் உறுதியாகிறது | 5 பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது |
| 6. இயற்கை உரிமைகள் | 6 மனித உரிமைகள் |

**3. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக :**

ஆறு உரிமைகள்.

சமூக அறிவியல்

1. சமத்துவ உரிமை (பிரிவு 14–18)
2. சுதந்திர உரிமை (பிரிவு 19–22)
3. சுரண்டலுக்கு எதிரான உரிமை (பிரிவு 23, 24)
4. சமயசார்பு உரிமை (பிரிவு 25–28)
5. கல்வி, கலாச்சார உரிமை (பிரிவு 29–30)
6. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வுகாணும் உரிமை (பிரிவு – 32)

**4. இந்தியக் குடியரசுத்தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி :**

1. நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை துவங்குதல்.
2. ஆண்டுக்கு இருமுறை நாடாளுமன்றத்தை கூட்டுகிறார்.
3. இவரின் ஒப்புதலுக்கு பின்னரே மசோதாக்கள் சட்டமாகிறது.
4. மாநிலங்கவைக்கு 12 உறுப்பினர்கள் நியமனம்.

**நீதிமன்ற அதிகாரங்கள் :**

1 சட்டப்பிரிவு 72–வது மூலம் நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற ஒருவரின் தண்டனையைக் குறைக்கவும், ஒத்திவைக்கவும், விடுவிக்கவும், மன்னிப்பு வழங்கவும் அதிகாரம் உண்டு.

2 தன் அதிகாரத்தை எந்த நீதிமன்றமும் கட்டுப்படுத்தாது.

**5. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?**

**பணிகள்**

1. அமைச்சர்களுக்கு அரசின் துறையை ஒதுக்குதல்.
2. அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி குறித்த முடிவு.
3. அமைச்சரவைத் தலைவராக பிற அமைச்சர்களுடன் பணி.
4. பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடல்

**கடமைகள்**

1. அமைச்சரவையின் முடிவுகளை குடியரசு தலைவருடன் விவாதித்தல்.
2. குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் பாலமாக செயல்படுதல்.
3. நாட்டின் தலைவராகவும், செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுதல்.
4. சர்வதேச மாநாடுகளில் பங்குபெறுதல்.

**6. ஆளுநரின் சட்டமன்ற (பல்வேறு) அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி :**

1. நிர்வாக அதிகாரம்
2. சட்டமன்ற அதிகாரம்
3. நிதி அதிகாரம்
4. நீதி அதிகாரம்
5. சட்ட மசோதா நிறுத்துதல், குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு பரிந்துரை
6. மாநில அரசை கலைக்க குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை

**7. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?**

1. அமைச்சரவை தொடர்பானவை
2. ஆளுநர் தொடர்பானவை
3. சட்டமன்றம் தொடர்பானவை
4. இதர அதிகாரங்கள் மற்றும் பணிகள்
5. மத்திய அரசுடன் சுமூக உறவு

**8. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக?**

1. இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சம்.
2. 120 உறுப்பு நாடுகள்
3. இரு வல்லரசு (ரஷ்யா, அமெரிக்கா) ஆதிக்கத்திற்கு எதிராக நேரு உருவாக்கினார்
4. அரசியல் இயக்கத்தில் இருந்து பொருளாதார இயக்கமாக மாறியது.
5. நோக்கம்–இராணுவ கூட்டணியில் சேராமை, தேசிய. சுதந்திரம் பராமரித்தல், தீர்மானித்தல்.
6. நிறுவன தலைவர்கள் –1, நேரு 2.நாசர் 3.நுக்ருமா 4. சுகர்னோ 5. டிட்டோ

**9. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகளைப் பற்றி விவாதிக்கவும்**

1. இயற்கை வளம்.
2. இராணுவ வலிமை.
3. சர்வேதேச சூழல்.
4. பொருளாதார வளர்ச்சியின் அவசியம்.
5. அரசியல் நிலைத்தன்மை, அரசாங்க அமைப்பு.
6. நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு.
7. நாட்டின் வரலாறு, பாரம்பரியம், தத்துவத்தின் அடிப்படை.
8. அமைதிக்கான அவசியம், ஆயுதகுறைப்புக்கு–பெருக்கத்தடை.

## பொருளியல்

## 5 மதிப்பெண் வினா–விடைகள் (வினா எண் 39 மற்றும் 40)

**1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி :**

1.மொத்த நாட்டு உற்பத்தி :
2, மொத்த உள்நாட்டு உற்பத்தி :
3. நிகர நாட்டு உற்பத்தி
4. நிகர உள்நாட்டு உற்பத்தி :
5. தனிநபர் வருமானம் :
6. தனிப்பட்ட வருமானம் :
7. செலவிட தகுதியான வருமானம்.



**2. GDP–ஐக் கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.**

**1. செலவின முறை :**

மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டின் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்டங்களுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத்தொகையாகும்.

செலவின முறை – $Y=C+I+G+(X-M)$

**2. வருமான முறை :**

பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தைக் கணக்கிட்டு கூறுவதாகும்.
வருமான முறை லாபம் + வட்டி + வாரம் + கூலி =

**3. மதிப்பு கூட்டு முறை :**

ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால் இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடலாம் .
மதிப்பு கூட்டு முறை –தேனீர் = சர்க்கரை + பால் + டீத்தூள்

**3. உலக மயமாக்கலின் சவால்களை எழுதுக,**

1. உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
2. உலகளாவிய போட்டி.
3. உலகில் ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தும்.
4. உலகில் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும்.
5. துரித உணவால் உடல்நலக்குறைவு, நோய். குழந்தை தொழிலாளர், அடிமைத்தனம் அதிகரிப்பு.
6. ஊதியங்கள், வேலைவாய்ப்புகள் அடிமட்டத்திற்கு செல்வது.

**4. பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக,**

**நன்மைகள்**

1. குறைந்த விலையில் தரமான உற்பத்தி
2. பரிவர்த்தனை செலவு இல்லை
3. வரி மாறுபாடு
4. உள்ளூர் பொருளாதார வேலைவாய்ப்பு

**தீமைகள்**

1. முற்றுரிமை வளரும்
2. சுற்றுச் சூழல் தீங்கு
3. உள்ளூர் வணிக வீழ்ச்சி

**5. புதிய வேளாண் கொள்கைக்கான முக்கிய குறிக்கோள்கள் யாவை.?**

1. உள்ளீடுகளின் (விதைகள், உரங்கள் உற்பத்தி திறனை உயர்த்துதல்.)
2. ஒவ்வொரு ஹெக்டேர் நிலத்திற்கும் உற்பத்தி அதிகரிப்பு.
3. ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலன்களுக்காக
    1. கடன் ஆதரவு
    2. நிலச் சீர்திருத்தம்
    3. இடைத்தரகர்கள் ஒழிப்பு.
4. விவசாய துறையில் நவீன தொழில் நுட்பம்
5. இந்திய விவசாயத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரிசெய்தல்.
6. கூட்டுறவு சங்கங்களின் தடையை நீக்குதல்
7. சுய உதவி நிறுவனங்ளின் அதிகார தடையை நீக்குதல்.

**6. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக,**

**நேர்முக வரிகள்**

ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிப்பதாகும்.

1. வருமான வரி
2. நிறுவன வரி
3. சொத்து வரி

**மறைமுக வரிகள்**

ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது மறைமுக வரி ஆகும்.

1. முத்திரைத்தாள் வரி
2. பொழுதுபோக்கு வரி
3. சுங்கத் தீர்வை வரி

**7. GST யின் அமைப்பை .எழுதுக**

**GST யின் அமைப்பு:**

1. மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST): கொள்முதல் வரி, ஆடம்பர வரி, பரிசுச்சீட்டு போன்றவை
2. மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST): மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி, கல்விக் கட்டணம் போன்றவை.
3. ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST): நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளடக்கியது. 5%, 12%, 18% 28% காய்கறி உணவு தானியங்களுக்கு வரிவிலக்கு.

**8. கருப்புப் பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.**

**1.கருப்புப் பணம்**

வரி நிர்வாகிகளிடமிருந்து மறைக்கப்பட்ட கணக்கில் காட்டப்படாத பணம்.

**2. கருப்பு பணத்திற்கான காரணங்கள்**

1. பண்டங்கள் பற்றாக்குறை
2. உரிமம் பெறும் முறை (பொருட்களின் குறைவான அளிப்பினால் தவறான விநியோகம்)
3. தொழில் துறையின் பங்கு கருப்பு பணம் தோன்ற தொழில் துறை முக்கிய பங்கு வகிக்கிறது.
4. கடத்தல் ஒரு முக்கிய காரணம்
5. வரி விகிதம் அதிகமாகும் போது கருப்பு பணம் அதிகரிக்கும்.

**9. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை?**

1. துறை சார்ந்த சிறப்பு கவனம்.
2. நிறுவனங்களுக்கு இடையே பரஸ்பர முறையில் இணைதல்.
3. புத்தாக்கத்தால் போட்டி.
4. நம்பிக்கையை எளிதாக்கும் சமூக கலாச்சாரம்.
5. பல்வேறு திறமையான தொழிலாளர்கள்.
6. சுய உதவிக் குழுக்களின் செயல்பாடு.
7. பிராந்திய மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு.
8. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிக்கு அருகில் இருத்தல்.

**வினா எண் 43 – வரலாறு – 8 மதிப்பெண் வினாக்கள்**

**1. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்க.**

**ஐ.நாவின் முக்கிய அமைப்புகள்**

**1. பொதுச்சபை**

- ❖ ஆண்டுக்கொரு முறை கூடும் இவ்வமைப்பில் நாடுகளின் நலன் சார்ந்த அம்சங்களுடன் முரண்பாடுகளுக்கான காரணங்களும் விவாதிக்கப்படுகின்றன.

**2. பாதுகாப்பு அவை**

- ❖ பாதுகாப்பு சபையானது 15 உறுப்பினர்களைக்கொண்டுள்ளது.
- ❖ அமெரிக்க ஐக்கியநாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இச்சபையின் நிரந்த உறுப்பினர்களாவர்.

**3. நிர்வாக அமைப்பு (செயலகம்)**

- ❖ ஐக்கியநாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம்ஆகும்.

**4. பன்னாட்டு நீதிமன்றம்**

- ❖ பன்னாட்டு நீதிமன்றம் ஐக்கியநாடுகள் சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும்.
- ❖ இது நெதர்லாந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது.

**5. ஐநாவின் இதர முக்கியத் துணை அமைப்புகள்**

- ❖ உணவு மற்றும்வேளாண்மை அமைப்பு FAO,
- ❖ உலகசுகாதார நிறுவனம் WHO,
- ❖ ஐ.நா.கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு–UNESCO

**ஐ.நா.வின் செயல்பாடுகள்**

- ❖ உலகம் எதிர்கொண்ட, மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐக்கியநாடுகள் சபை தன் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது.
- ❖ 1960களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும்.
- ❖ மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகாலமாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐக்கியநாடுகள் சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன.

**2. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்டமறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.**

- ❖ இந்தியாவிற்கு தன்னாட்சி பகுதி வழுங்குவதில் திருப்தி அடையாத காங்கிரஸ் கட்சி 1930 ஜனவரி 26 ஆம் நாள் சுதந்திர நாளாக அடைவது என அறிவிக்கப்பட்டது.
- ❖ இதன்படி வரிகொடா இயக்கம் சட்டமறுப்பு இயக்கம் மூலமாகவும் வன்முறையற்ற முறையில் சுதந்திரம் அடைவது என குறித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது.
- ❖ இந்த வரி கொடா இயக்கம் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு அங்கீகாரம் அளித்தது. பல கோரிக்கைகள் அடங்கிய மனுவை காந்தியடிகள் அரசப் பிரதிநிதியிடம் அளித்தார்.
- ❖ பதில் அளிக்காத நிலையில் காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை தீவிரப்படுத்தினார்.
- ❖ உப்பு மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுபூர்வமான முடிவாகும்.
- ❖ காந்தியடிகள் 1930 மார்ச் மாதம் 12ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ் பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார்.

- இந்த யாத்திரையில் நூற்றுக்கணக்கானோர் சேரச்சேர அது நீண்டு கொண்டே போனது.
- காந்தியடிகள்தனது 61 ஆவது வயதில் 24 நாட்களில் 241 மைல் தொலைவு யாத்திரையாக நடந்து சென்று 1930 ஏப்ரல் 5ஆம் நாள் மாலை தண்டி கடற்கரையைஅடைந்தார்.
- அடுத்த நாள்காலை ஒரு கைப்பிடி உப்பைக் கையில் எடுத்து உப்புச் சட்டத்தை மீறினார்.

**3. இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினை திறனாய்வு செய்க.**

**1. இராமகிருஷ்ண பரமஹம்சர்:**

- கல்கத்தாவுக்கு அருகேயிருந்த தட்சிணேசுவரம் என்னும் ஊரைச் சார்ந்த எளிய அர்ச்சகர்.
- புனிதத் தாயான கடவுள் காளியின் தீவிர பக்தரான அவர் அக்கடவுளின் திருவிளையாடல்கள் முடிவற்றவை என அறிவித்தார்.
- அவருடைய கருத்தின் படி அனைத்து மதங்களும் உலகளாவிய, எல்லோருக்குமான மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன.
- அவற்றைப் பின்பற்றினால் அவை வீடுபேற்றுக்கு இட்டுச்செல்லும்,
- மனிதர்களுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யப்படும் சேவையாகும் என்றார்.
- ஜீவன் என்பதே 'சிவன்' என்றார்

**2. சுவாமி விவேவகானந்தர்:**

- ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர்.
- மனிதகுலத்திற்குத் தொண்டு செய்தல் எனும் கோட்பாட்டைப் பரிந்துரைத்தார்.
- இறைவனை அடைய வேண்டுமென்றால் எளிய மனிதனை நினை என்று கூறியவர்.
- பண்பாடு தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர்.
- இந்து சமயத்திற்கு புத்துயிர் அளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறை கூவல் விடுத்தவர்.
- 1893 – அமெரிக்க சிகாகோ உலக சமய மாநாட்டில் இந்து மதக்கருத்துக்களை உலகறியச் செய்தவர்.
- இந்து சமய பக்தி மார்க்கம் கொண்ட இவரது சொற்பொழிவுகள் மிகச்சிறப்பு வாய்ந்தது.
- சுவாமி விவேகானந்தரின் செயலாக்கமிக்க சித்தாந்தம் மேலைக்கல்வி பயின்ற வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றத்தை உண்டு பண்ணியது.

**4. 1857 ஆ ம் ஆண்டு கிளர்ச்சியின் காரணங்கள் மற்றும் விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.?**

**காரணங்கள்**

**ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை:**

1. **மேலதிகாரக் கொள்கை**
   - உள்நாட்டு ஆட்சியாளர்கள் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகளை இணைத்துக் கொண்டனர்.
2. **வாரிசு இழப்புக் கொள்கை**
   - அரசுக் கட்டிலில் அரியணை ஏற நேரடி ஆண் வாரிசு இல்லையெனில் அவர்களின் இறப்புக்குப் பின் அப்பகுதி ஆங்கிலேய ஆட்சிப் பகுதியுடன் இணைக்கப்படும்.

- ❖ இதன் மூலம் சதாரா, சம்பல்பூர்,ஜான்சி,நாக்பூர் ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டன.

**இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத்தன்மை இல்லாதது:**

- ❖ மதக்குறியீடுகள் தடை செய்யப்பட்டது.
- ❖ புதிய தலைப்பாகை அணிய வற்புறுத்தப்பட்டது.
- ❖ ஆடைக் கட்டுப்பாடுகள் மதம் மாற்றுவதற்கான முயற்சியாக கருதப்பட்டது.
- ❖ ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டியது.
- ❖ வீரர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டனர்.

**விளைவுகள்**

- ❖ இந்தியா ஆங்கிலேய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது
- ❖ ஆங்கில அரசு சமூக சீர்திருத்த பிரச்சினைகளை கவனமுடன் கையாண்டது.
- ❖ விக்டோரியா மகாராணியின் பே ரரிக்கை
- ❖ கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி முடிவுக்கு வந்தது.

**5. பன்னாட்டு சங்கத்தின் பணிகள் மற்றும் தோல்விக்கான காரணங்களை எழுதுக.?**

**பணிகள்**

இது மூன்று பிரச்சனைகளில் வெற்றி பெற்றது.

- ❖ பின்லாந்துக்கும் சுவீடனுக்குமிடையே ஆலேண்டு தீவுகள் பிரச்சனையைத் தீர்த்தது.
- ❖ போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா பிரச்சனையைத் தீர்த்தது.
- ❖ கிரீஸ், பல்கேரியா பிரச்சனையைத் தீர்த்தது.
- ❖ லொக்கர்னோ உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.

**தோல்விக்கான காரணங்கள்**

- பன்னாட்டுச் சங்கம் முதல் உலகப்போரில் வெற்றிபெற்ற நாடுகளின் அமைப்பாகவே காணப்பட்டது.
- சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.
- அமைதிக்கான இவ்வமைப்பை உருவாக்கியவர்கள் தேசியவாதத்தின் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்திருக்கவில்லை.

**6. 1905 ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்காளப் பிரிவினையின்போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்து கொண்டனர்?**

1. இது இந்து – முஸ்லிம் பிரிவினையை உருவாக்கியது.
2. பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணிப்பதற்கான புதிய வழிமுறைகளைத் தேடத் தொடங்கினார்கள்.
3. வங்கப் பிரிவினையை திரும்பப் பெறுவது சுதேசி இயக்கத்தின் கொள்கையாக இருந்தது.
4. தீவிர தேசியவாதிகள் மிகப்பெரிய அளவில் பொதுமக்கள் போராட்டத்தைத் துவங்க ஆதரவாக இருந்தனர்.
5. வங்காளம் பிரிவினையான நாள் துக்க நாளாக அறிவிக்கப்பட்டது.
6. ஆயிரக்கணக்கானவர்கள் கங்கை நதியில் நீராடி வந்தே மாதரம் பாடலை பாடியபடி கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றார்கள்.

**7. சிவகங்கையின் துன்பகரமான வீழ்ச்சிக்குக் காரணமானவற்றை ஆராய்ந்து அதன் விளைவுகளை எடுத்தியம்புக.**

**1. வீழ்ச்சிக்கான காரணங்கள்**

1. மே 1801 இல் தஞ்சாவூரிலும் திருச்சியிலும் இருந்த கலகக்காரர்களை ஆங்கிலேயர்கள் தாக்கினார்கள்.
2. கலகக்காரர்கள் பிரான்மலையிலும், காளையார் கோவிலிலும் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் படைகளால் மீண்டும் தோற்கடிக்கப்பட்டனர்.
3. 1801 இல் சிவகங்கை ஆங்கிலேயரால் இணைக்கப்பட்டது.
4. ஊமைத்துரை மற்றும் செவத்தையா கொல்லப்பட்டனர்.

**2. விளைவு –கர்நாடக உடன்படிக்கை:**

1. தமிழகத்திலிருந்த அனைத்து உள்ளூர் குடித்தலைமையினரின் எண்ணங்களையும் நீர்த்துப் போகச் செய்தது.
2. பிரிட்டிஷார் தங்கள் கட்டுப்பாட்டை நேரடியாகத் தமிழகத்தின் மீது ஏற்படுத்தினார்.
3. பாளையக்காரர் முறை முடிவுக்குக் வந்தது.

**8. நீதிக் கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி, சமூக நீதிக்கான அதன் பங்களிப்பை சுட்டிக் காட்டவும்.**

**நீதிக் கட்சியின் தோற்றம்:**

1. தமிழக அரசியல் பிராமணரகளின் ஆதிக்கத்தை எதிர்த்து பிரமாணலல்லா டாக்டர். நடேசனார், பி .டி.தியாகராஜர், டிநாயர் மற்றும் அலமேலு மங்கை .எம். ஆகியோர் பிராமணர அல்லாத தென்னிந்திய நல உரிமை சங்கத்தை 1916 நவம்பர் 20ல் உருவாக்கினர்.
2. இதுவே நீதிக் கட்சியாக பெயர் மாற்றப்பட்டது.

**நீதிக் கட்சியின் பங்களிப்புகள்:**

1. கட்சியின் கொள்கைகளைப் பரப்ப 'திராவிடன்', 'ஜஸ்டிஸ்', 'ஆந்திர பிரகாசிகா' போன்ற செய்தித்தாள்களை வெளியிட்டது.
2. பிராமணரல்லாதவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியல் களத்தில் இடம்.
3. சாதி மறுப்பு திருமண ஆதரவு, தேவதாசி முறையை ஒழிப்பு.
4. 1921–ல் அரசியலில் பெண்களுக்கு வாக்குரிமை, இடஒதுக்கீடு.
5. 1924–ல் பணியாளர் தேர்வு வாரியம் தோற்றம்.
6. 1926–ல் அறநிலையத்துறை சட்டம் இயற்றல்.
7. ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா.
8. மதிய உணவு திட்டம் சென்னையில் முதன்முதலில் அறிமுகம்.

**வினா எண் : 41– வரலாறு – காலக்கோடு**

| இந்திய நிகழ்வுகள் | | | உலக நிகழ்வுகள் | | |
|---|---|---|---|---|---|
| 01 | 1914 | முதல் உலகப்போர் தொடக்கம் | 01 | 1914 | முதல் உலகப் போர் தொடக்கம் |
| 02 | 1916 | தன்னாட்சி இயக்கம் | 02 | 1916 | வெர்டூன் போர் |
| 03 | 1917 | சம்பரான் சத்தியாகிரகம் | 03 | 1917 | ரஷ்யப் புரட்சி |
| 04 | 1918 | கேதா சத்தியாகிரகம் | 04 | 1918 | முதல் உலகப் போர் முடிவு |
| 05 | 1919 | ரௌலட் சட்டம் | 05 | 1919 | பாரிஸ் அமைதி மாநாடு |
| 06 | 1920 | கிலாபத் இயக்கம் | 06 | 1920 | பன்னாட்டு சங்கம் தோற்றம் |
| 07 | 1922 | சௌரி சௌரா சம்பவம் | 07 | 1922 | முசோலியின் ரோம் அணிவகுப்பு |
| 08 | 1927 | சைமன் குழு நியமனம் | 08 | 1927 | வியட்நாம் தேசியக்கட்சி உதயம் |
| 09 | 1929 | லாகூர் காங்கிரஸ் மாநாடு | 09 | 1929 | பொருளாதார பெருமந்தம் |
| 10 | 1935 | இந்திய அரசு சட்டம் | 10 | 1935 | முசோலினியின் எத்தியோப்பிய படையெடுப்பு |
| 11 | 1939 | இரண்டாம் உலகப்போர் தொடக்கம் | 11 | 1939 | இரண்டாம் உலகப்போர் தொடக்கம் |
| 12 | 1940 | ஆகஸ்ட் நன்கொடை | 12 | 1940 | பிரிட்டன் போர் |
| 13 | 1942 | கிரிப்ஸ் தூதுக்குழு வருகை | 13 | 1942 | ஸ்டாலின் கிரேடு போர் |
| 14 | 1945 | இரண்டாம் உலகப்போர் முடிவு | 14 | 1945 | இரண்டாம் உலகப்போர் முடிவு |
| 15 | 1947 | இந்தியா விடுதலை பெறுதல் | 15 | 1947 | இஸ்ரேல் அமைதி உடன்படிக்கை |


காலக்கோடு - இந்திய நிகழ்வுகள்
1900 – 1920
Scale
1 அலகு - 10 ஆண்டுகள்
1900
1905
வங்கப் பிரிவினை – 1905
1910
1915
1916
லக்னோ உடன்படிக்கை – 1916
1918
கேதா சத்தியாகிரகம் – 1918
1919
ரௌலட் சட்டம் – 1919
1920 ஒத்துழையாமை இயக்கம்


காலக்கோடு - இந்திய நிகழ்வுகள்
1910– 1930
Scale
1அலகு - 10 ஆண்டுகள்
1910
1915
1916
லக்னோ உடன்படிக்கை 1916
1918
கேதா சத்தியாகிரகம் 1918
1919
ரௌலட் சட்டம் 1919
1920
ஒத்துழையாமை இயக்கம் 1920
1922
சௌரி சௌரா சம்பவம் 1922
1925
1930



காலக்கோடு – இந்திய நிகழ்வுகள்
1920 - 1940
Scale
1 அலகு - 10 ஆண்டுகள்
1920
1922 சௌரிசௌரா சம்பவம் 1922
1925
1930 முதல் வட்டமேசை மாநாடு 1930
1931 இரண்டாம் வட்டமேசை மாநாடு 1931
1932 மூன்றாம் வட்டமேசை மாநாடு 1932
1935 இந்திய அரசுச் சட்டம் 1935
1940




காலக்கோடு - இந்திய நிகழ்வுகள்
1930 - 1950
Scale
1930 முதல் வட்டமேசை மாநாடு 1930
1931 இரண்டாம் வட்டமேசை மாநாடு 1931
1932 மூன்றாம் வட்டமேசை மாநாடு 1932
1935 இந்திய அரசுச் சட்டம் 1935
1940 ஆகஸ்ட் நன்கொடை 1940
1945
1950


சமூக அறிவியல்


WORLD
உலகம்
மாஸ்கோ
ரஷ்யா
ஜெர்மனி
ருமேனியா
பிரான்ஸ்
இத்தாலி
அமெரிக்கா
துருக்கி
ஜப்பான்
ஹிரோஷிமா
நாகசாகி
கிரீஸ்
ஹவாய்த்தீவுகள்


INDIA - இந்தியா
காஷ்மீர்
லாகூர்
அமிர்தசரஸ்
மீரட்
டெல்லி
லக்னோ
சௌரிசௌரா
சம்பரான்
கான்பூர்
ஜான்சி
அலகாபாத்
அகமதாபாத்
கேதா
சூரத்
தண்டி
நாக்பூர்
கல்கத்தா
மும்பை
பூனா
ஹைதராபாத்
சென்னை
வேதாரண்யம்

சமூக அறிவியல்


INDIA - இந்தியா


INDIA - இந்தியா


INDIA - இந்தியா


INDIA - இந்தியா



**திரு. குழந்தை பிரான்சிஸ்**
**ஐ.வி.டி.பி நிறுவனர் - தலைவர்**

சேலம் மாவட்டம், மின்னாம்பள்ளி அக்ரஹாரத்தில் 1946 ஆம் ஆண்டு **திரு.குழந்தை-திருமதி.மதலைமேரி** தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார் **திரு. குழந்தை பிரான்சிஸ்.** அவர் ஒரு ஏழை விவசாயக் குடும்பப் பின்னனியில் பிறந்து வளர்ந்தாலும், உயர்ந்த வாழ்க்கை இலட்சியத்துடன் சமூக சேவையை தன் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்டார். கல்வியின்பால் கொண்ட ஆர்வம் காரணமாக, பெற்றோர் தங்களது சொந்த நிலத்தை விற்று, இவரை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயிற்றுவித்தனர். அங்கு இளங்கலை வணிகவியல் பட்டம் முடித்து, மக்கள் பணியில் ஈடுபடவேண்டும் என்ற கனவுடன் தனது வாழ்க்கையை மாற்றியமைத்தார்.

### ஆன்மிக பணியிலிருந்து மக்கள் பணிக்கு ...

இளமையிலேயே இயல்பாகவே அனைவருக்கும் உதவிப்புரிவதில் நாட்டமும், அதற்காக தன்னையே அர்ப்பணிக்கவும் துணிவு கொண்ட இவர், திருச்சிலுவை குருக்கள் சபையில் சேர்ந்து சமூகநலப்பணியையும், ஆன்மிகப் பணியையும் செய்வதற்காக முழுமையாக தன்னை அர்ப்பணித்தார். அக்காலக்கட்டத்தில் அகதிகள் பணி, போர் கால பணி, இளைஞர் பணி, மலை வாழ் மக்கள் பணி என்று இவருடைய அர்ப்பணிப்பு பலமுகங்களைக் கண்டது. ஆன்மிகப் பணிக்காக குருக்கள் சபையில் பணியாற்றிய போது, நாட்றாம்பாளையம் மலை கிராமத்திற்கு சென்ற போது, அக்கிராம மக்களின் வறுமையும், துயரமும் கண்டு, 1975 ஆம் ஆண்டு ஆன்மிக சேவையை துறந்து முழுமையாக மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்க முடிவு செய்தார். இதுவே அவரது வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்தது.

### ஐ.வி.டி.பி - மக்கள் மேம்பாட்டின் உந்து சக்தி

1979ம் ஆண்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஐ.வி.டி.பி என்று அழைக்கப்படும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை உருவாக்கிய இவர், துவக்கத்தில் சவால்களைச் சந்தித்தாலும், பின்னர் மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து, கிராமப்புற மகளிரின் வாழ்க்கையில் நிதி சுதந்திரத்தையும், விழிப்புணர்வையும் உருவாக்கினார். இன்று, அவரால் தொடங்கப்பட்ட மகளிர் குழுக்கள், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் 2,55,500 மகளிரை உறுப்பினர்களாக கொண்ட 14,600 சுய உதவிக்குழுக்களாக பரந்து விரிந்து பல்லாயிரக்கணக்கான பெண்களின் வாழ்க்கையை மாற்றியுள்ளன.

**ஐ.வி.டி.பி யின் முக்கிய சேவைகள் :**

- சுய உதவிக் குழுக்கள்
- தடுப்பணை கட்டுமானம், நீர்ப்பாசன திட்டங்கள்
- கோட்டையூரில் இயங்கிவரும் ஐ.வி.டி.பி நேதாஜி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
- கல்வித் திட்டங்கள் - அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வெற்றி நம் கையில் வினாவிடை கையேடு, வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளிட்ட கல்விச் சேவைகள்
- நிதியுதவி - ஏழை மாணவர்களுக்கு பள்ளி, கல்லூரி கல்விக்கான உதவித்தொகைகள்
- பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான கல்லூரி கல்வி உதவித்தொகை உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை.
- ஒருங்கிணைந்த வங்கி வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையம் (தையற் பயிற்சி, ஆரி வேலைப்பாடு பயிற்சி, கணினிப் பயிற்சி)
- சுகாதாரத் திட்டங்கள் - சோலார் விளக்குகள், நேப்கின்
- இறந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி.
- சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவச சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள்.

**இராமன் மகசேசே குழந்தை பிரான்சிஸ்**

சாதனைக்கும் பாராட்டுக்கும் உரியவரான திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு இந்தியா மற்றும் பன்னாட்டளவில் ஏராளமான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இவருடைய வாழ்க்கையின் உச்சமாக, 2012 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவில், ஆசியாவின் நோபல் பரிசு எனப் போற்றப்படும் ”இராமன் மகசேசே விருது” வழங்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 இல் மணிலாவில் இராமன் மகசேசே விருது பெற்ற போது இவர் உதிர்த்த வார்த்தைகள் **“எல்லாப்புகழும் இந்தியப் பெண்களுக்கே”.**

**இராமன் மகசேசே விருது - விளக்கம்**

பிலிப்பைன்ஸ் அரசின் உடன்பாட்டுடன் பல்வேறு ஆய்வுகளுக்கு பிறகு அரசுப்பணி, பொதுசேவை, சமூக தலைமை, இதழியல், இலக்கியம் மற்றும் மக்கள் தொடர்பு கலை, அமைதி மற்றும் பன்னாட்டு புரிதல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கும் தனிமனித முயற்சிக்காக இந்த இராமன் மகசேசே விருது வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இப்பரிசு ”தங்கள் சுற்றுப்புறத்தில் சமூகமாற்றங்களை ஏற்படுத்த சிறப்பாக பணியாற்றிய, ஆனால் வெளியே அதிகம் அறியப்படாத தனிநபர்களுக்கு வழங்கப்படுகிறது. அங்ஙனம் சாதாரண பெண்களின் மாண்பை, தனிச்சிறப்பை, சக்தியை உணர்ந்த நமது ஐ.வி.டி.பி நிறுவனர் முழுவதுமாக மகளிரைக் கொண்டே சுய உதவிக்குழுக்களை நடத்தி வருகிறார். கிராமப் புறங்களில் அதிகம் கல்வி பெற முடியாத பெண்கள், இன்று குழுவை வழி நடத்துனர்களாக, ஒருங்கிணைப்பாளர்களாக, பயிற்சியாளர்களாக, தணிக்கை ஊழியர்களாக பணிபுரிவதே மாபெரும் வெற்றியாகும். இச்சமூக மாற்றத்தினைக் கொண்டு வந்ததன் அடிப்படையிலேயே இவருக்கு இராமன் மகசேசே விருதினை பிலிப்பைன்ஸ் அரசு வழங்கி கௌரவித்தது.

## இராமன் மகசேசே விருது பெற்றவர்கள் விவரம்

இந்தியாவிலிருந்து இதுவரை 52 சாதனையாளர்கள் இராமன் மகசேசே விருதைப் பெற்றுள்ள நிலையில், தமிழகத்திலிருந்து கீழ்க்கண்ட மதிப்பிற்குரிய நபர்கள் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

1. திரு. ஆ.ளு.சுவாமிநாதன் - 1971
2. திருமதி.ஆ.ளு.சுப்புலட்சுமி - 1974
3. திருமதி. அருணாராய் - 2000
4. மருத்துவர் சாந்தா - 2005
5. திரு. பாலகும்மி சாய்நாத் - 2007
6. திரு. குழந்தை பிரான்சிஸ் - 2012
   (ஐ.வி.டி.பி நிறுவனர்)
7. மருத்துவர் ரவி கண்ணன் - 2023



ஐ.வி.டி.பி நிறுவனர் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களின் சமூக அக்கறையின் வெளிப்பாடாக, இலவசமாக வழங்கப்படும் இந்த வெற்றி நம் கையில் என்ற இலவச புத்தகமும் இவர் ஏழை மாணவர்களுக்கு செய்து வருகின்ற எண்ணற்ற உதவிகளில் ஒன்றுதான். இதைப்படித்து பயன் பெறுகின்ற இலட்சக்கணக்கான மாணவர்களை இவர் கேட்டுக் கொள்வது கடமைகளைச் செய்யுங்கள். வாழ்க்கையில் முன்னேறுங்கள். சமுதாயத்தில் மற்றவர்களுக்கு உதவுங்கள் என்பது தான்.

உங்கள் தேர்வுகளில் வெற்றி பெற உதவும் சிறந்த கருவியைத் தரும் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களின் சேவை என்றும் தொடர வாழ்த்துவோம்!

# தேர்வை சிறப்பாக எழுத சில குறிப்புகள்
# தேர்வுக்கு ஒரு மாதத்திற்கு முன்

- ஒரு மாத காலத்தை 3 நாட்களுக்கு ஒரு பாடம் என்ற சுழற்சி முறையில் பிரித்துக் கொண்டு, அட்டவணை போட்டு, படிக்கும் அறையில் பார்வையில் படும்படி ஒட்டிவிடவும்.
- கூர்மையான ஆயுதம், பிளேடு, கத்தி போன்றவற்றை அவசரமாக பயன்படுத்துவதை தவிர்த்தல் நலம்.
- தேர்வு கால விடுமுறை நாட்களில் சற்று ரிலேக்சேஷனுக்காக டி.வி பார்ப்பதையோ, கிரிக்கெட் மாட்ச் விளையாடுவதையோ கட்டாயம் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அரைமணி நேரம் அதில் செலுத்தும் கவனம் குறைந்தபட்சம் 6 மணி நேரமாவது மனதில் தாக்கத்தை ஏற்படுத்திவிடும். இதனால் கவனக்குறைவு ஏற்பட வாய்ப்புள்ளது.
- ஒய்வு என்பது செய்கின்ற வேலையை மாற்றிச் செய்வது, அதாவது தமிழ் படித்துக் கொண்டிருந்தால், அறிவியல் படித்தல், ஆங்கிலம் படித்துக் கொண்டிருந்தால் கணக்கை போட்டுப்பார்த்தல் என்று மாற்றி படிக்கவும்.
- யோகா, தியானம் போன்ற மனம் சார்ந்த பயிற்சிகளை தினமும் சிறிது நேரம் செய்யுங்கள்.
- ஒவ்வொரு பாடத்தையும் அதன் பொருளுணர்ந்து புரிந்து படிக்கவும். படித்ததை மறக்காமல் இருக்க எழுதிப் பாருங்கள். அப்பொழுதுதான் எழுதுவதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்கிறது என்பது புரியும். மேலும் ஒரு தடவை எழுதிப் பார்த்தால் நூறு தடவை படிச்சதுக்கு சமம்.

# தேர்வு எழுதும்பொழுது

- தேர்விற்கான பெல் அடிக்கும் வரை, தேர்வறைக்கு செல்லும் முன் புத்தகத்தை பிரித்து வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தீர்கள் எனில் பதட்டமே மிஞ்சும். எனவே ரிலாக்ஸாக தேர்வெழுதச் செல்லுங்கள்.
- கேள்வித்தாளை வாங்கியவுடன் ஒருமுறை படித்து பார்த்துக் கொள்ளவும். இதனால் அவசரத்தில் எழுதும்பொழுது நன்கு விடை தெரிந்த கேள்விக்கே பதில் எழுதாமல் போகும் சந்தர்ப்பம் தவிர்க்கப்படும். தவறின்றி தெளிவாக விடை தெரிந்த கேள்விக்கே முதல் விடையளிக்கவும்.
- ஒவ்வொரு பதிலுக்கும் முன்னே அப்பதிலுக்குரிய கேள்வியின் எண்ணை தெளிவாக குறிப்பிடவும். பதிலை சரியாக எழுதி, கேள்வியின் எண்ணை தவறாக எழுதிவிட்டால் மதிப்பெண் குறைய வாய்ப்புள்ளது.
- ஒவ்வொரு பதிலுக்கும் இடையே உரிய இடைவெளி விட்டு கோடிட்டு காட்டவேண்டும். முக்கியமான குறிப்புகளை அடிக்கோடிட்டு காட்டவேண்டும்.
- தெளிவான கையெழுத்துடன், வரிக்கு வரி சீரான இடைவெளியில் ஒரு பக்கத்திற்கு குறைந்தது 20வரிகள் வருமாறு எழுத வேண்டும்.
- அறிவியல் விதிகள், சூத்திரங்கள் தவிர்த்து ஏனைய வினாக்களுக்கான விடையை இயன்றவரை சொந்த நடையில் எழுதிப் பழகுங்கள்.

அதிக மதிப்பெண்களுடன் வெற்றி காணப்போகும் உங்களுக்கு நல்வாழ்த்துக்கள்.